International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கவிஞர் மு. மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்கள்' படைப்பில் அரசியலும் காந்தியமும்

**முனைவர் ரெ. ராதிகா**
உதவிப்பேராசிரியர்
தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி) பெரம்பலூர் - 621 212

**முன்னுரை**

சமுதாயத்தின் உயர்விற்கும், தாழ்விற்கும் அரசியலே முக்கியக் காரணமாகின்றது. மக்கள் கூட்டத்தையும் அவர்தம் ஒருங்கிணைப்பையும் சமுதாயம் எனக் குறிப்பிடலாம். மக்கள் குழுவான இச்சமுதாய இயக்கத்திற்கு ஒரு வழிகாட்டுதல் தேவை. அந்த வழிகாட்டுதலை முடியாட்சிக் காலத்தில் வழிவழியாக வந்த அரசர்கள் செய்தனர். தற்போது பரவலாக முடியாட்சி மறைந்துவிட்ட நிலையில் பெரிதும் மக்களாட்சியே இன்று நடைபெற்று வருகின்றது. மக்களாட்சியில் ஆட்சிப் பீடத்தைப் பிடிப்பதற்குப் போட்டியிடுகின்ற நிலையில் அரசு தொடர்பான இயலாகிய 'அரசியல்' அமைகின்றது. மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றிவிட்ட அரசியல் அவர்கள் வாழ்க்கை உயர்வு, தாழ்விற்குக் காரணமாக அமைகின்றது. அவ்வகையில் நம் நாட்டின் அரசியல் நிலையை ஆய்வதாக இவ்வியல் அமைகின்றது.

**அரசியல்**

ஒரு சமுதாயம் எவ்விதத் தடையும் இல்லாமல் அமைதியாக வழிநடக்கத் தேவை அரசியல். இந்த அரசியலே சமுதாய மாற்றங்களுக்குக் காரணமாக அமையும் என்பது உறுதி. அரசியல் என்பது மக்களை வழிநடத்தும் குழு அல்லது அமைப்பு எனலாம். இதில் சுயநலம் இல்லாமல் பொதுநலம் மட்டுமே இருக்க வேண்டும். மக்களையும், நாட்டையும் பாதுகாத்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதுதான் அரசியல்.

**"அரசியலானது அரசின் இயல்பு, அரசாங்கத்தின் இயல்பு முதலியவற்றின் உண்மையைக் கூறுவதாகும். ஒருசமுதாயம் நிலைபெறுவது அதன் அரசையும், அரசாங்கத்தையும் பொறுத்திருப்பதால் அரசியலே முதன்மையான அறிவுப்பகுதி"**[1] என்கிறார் அரிஸ்டாட்டில்.

அரசியலுக்கென்று பல விதமான உரிமைகளும், நல்ல செயல்பாடுகளும் உள்ளன. ஆனால் அதைப் பயன்படுத்த முடியாத நிலையும், மக்களின் அறியாமையும்தான் அரசியலைத் தெளிவு நிலையில் வைக்கவில்லை.

**"அரசியல் உரிமைகள் பல வகைப்படும். அவை வாக்களிக்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, நிர்வாகம், செய்யும் உரிமை, அரசை விமர்சிக்கும் உரிமை என்பன குறிப்பிடத்தக்கவையாகும்"**[2] இவ்வளவு உரிமைகள் இருந்தும் அவற்றை நடைமுறைப்படுத்த மக்களிடையே துணிவு இல்லை. காரணம் அரசியல்வாதிகளின் மறைமுகமான அடக்குமுறைகள் மக்களைப் பயமுறுத்தலேயாகும்.

**"மனிதனுடைய சமூக இயல்பினாலும், பொதுச் செயலினாலும் வரும் நல்வாழ்க்கைக்கான நன்மைகளைக் கருதியும், ஒரு சிறந்த நிறுவனம் ஏற்படுத்த வேண்டும் என்பதனாலும்**

**சமூகத்திலிருந்து அரசு உருவாயிற்று. அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது என்ற அடிப்படையில் அரசு, சமூகத்தின் ஒரு முக்கிய நிறுவனமாகத் திகழ்கின்றது"[3]**

இந்திய விடுதலைக்கு முதலில் நாம் காண வேண்டியது சமூக விடுதலையே என்பதைப் பாரதியார் பல பாடல்களில் வலியுறுத்தினார்.

**"ஏழை என்றும் அடிமை என்றும்**

**எவரும் இல்லை ஜாதியில்**

**ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்**

**ஜன்மம் இனி தேசத்தினில் எய்தினராயின்"[4]**

என்று வாய்ப்பு நேரும் போதெல்லாம் சமூக விடுதலையை வலியுறுத்திப் பாடியுள்ளார் பாரதியார்.

**"அரசு என்பது இறைமை பூமியின் ஒரு பகுதியில் அடங்கியிருக்கிறது. சட்டத்தையும் அரசியலையும் நிலையாக அயலாரின் ஆதிக்கத்திற்கு உட்படாமல், மக்கள் கீழ்ப்படியும் முறையான அரசாங்கத்தோடு கூடிய மக்கள் கூட்டமாகும்"[5]** என்கிறார் க.இராமச்சந்திரன்.

அரசியலைச் சார்ந்த சட்டம் உரிமை இவை எந்த அளவிற்குப் பயன்படுத்த வேண்டும். இவை மனிதனுடைய சமூக வாழ்க்கைக்கு எவ்வெவ்வகையில் பணிபுரிகின்றன. என்ற வினாக்களுக்கு சமூக அறிவியலின் மூலம் விடைகள் கிடைக்கின்றன. பொதுவாக, அரசியல் சமுதாயத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு கருவியாகவும். அரசுக்குத் தனி இடமளிக்கும் ஒரு தனியியலாகவும் கருதப்படுகின்றது.

மக்களால் மக்களுக்காக் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களால் ஆளப்பெறும் ஆட்சிக்குடையின் கீழ்தான் நம்முடைய அரசியல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அப்படியிருந்தும் இன்றைய சமுதாயம் அவலத்தை நோக்கியேச் செல்கின்றது. ஒவ்வொரு படைப்பாளியும் இந்தச் சமுதாயத் துன்பங்களைக் கண்டு நெஞ்சு பொறுக்க முடியாமல் கொதித்தெழுகின்றனர். புதுக் கவிதையால் ஓர் அரசியல், சமூகமாற்றத்தை நிகழ்த்த முடியும் என்று நம்புகின்றனர். அந்த மாற்றத்தைக் கொண்டு வரும் புரட்சியையும், அதன் விளைவாக வரவிருக்கும் புதுயுகத் தீர்க்கதரிசிகளாகவும் தங்களை நினைத்துக் கொண்டு பாடுகின்றனர். சமூகச் சுற்றுப்புறச் சூழலை உற்று நோக்குகின்றனர். பருந்து நோக்கிலும் நுணுக்கமாகவும் நோக்குகின்றனர். கேள்விக் கணைகளை வரிசையாகத் தொடுக்கின்றனர். நம்வாழ்க்கையில் மாற்றங்களை விளைவிக் கும் புறக்கூறுகளில் தம் சிந்தையை விரிக்கின்றனர். எனவே சுதந்திரம், மக்களாட்சி போன்ற கட்டமைப்புக்கு இன்று வழிநடத்தும் அரசியல் ஆகியவை புதுக்கவிஞர்களின் பார்வையில் படுகின்றன.

**காந்தியம்**

காந்தியடிகள் சுதந்திரம் வாங்கி நம் நாட்டை, நம் கையிலே கொடுத்துச் சென்ற பொழுது நம்நாடு மிகுந்த வளத்தோடுதான் இருந்தது. அமுதசுரபியைப் போல் அள்ள அள்ளக் குறையாத வளத்தைக் கொண்ட நாடு இன்று வளமிழந்து உள்ளது என்பதைத் தம் கவிதைகளில் சாடுகிறார்.

**"கண்டு பிடித்த**

**சுதேசி ஆயுதமாம்**

**கைராட்டையைச் சுற்றியசிலர்**

**தற்போது**

**தங்க நூல் நூற்கிறார்களாம்**

**எங்களுக்கோ**

**வெள்ளியும் தங்கமும்**

**விழாக்களின் பெயரில்தான்**

**வருகின்றன"[6]**

என்ற வரிகளில் காந்தியின் வாரிசு என்று சொல்லிக் கொள்ளும் அரசியல் வாதிகள் காந்தியின் பெயரைப் பயன்படுத்தி வசதியான வாழ்க்கை வாழ்ந்து வருவதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இன்றைய அரசியல் வாதிகளுக்குக் காந்தியடிகள் தேவையில்லை. அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு நேர்மையற்ற அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளை தம் கவிதைகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார். காந்தியடிகள் பெரிதும் விரும்பியது சேரிகளைத்தான், அதனால் தான் காந்தியவாதிகள் இன்று தேசத்தையே சேரியாக மாற்றிவிட்டார்கள் என்று வேதனையோடு குறிப்பிடுகிறார்.

**"ஒரே ஒரு விஷயத்தில் மட்டும்**

**இந்த நாட்டுமக்கள்**

**உன்னை**

**அப்படியே பின்பற்றுகிறார்கள்**

**அரை குறையாகத்தான்**

**உடுத்துகிறார்கள்**

**தேசம் போகிற**

**போக்கைப் பார்த்தால்**

**பிறந்த நாள் உடையே**

**எங்கள்**

**தேசிய உடையாகிவிடும் போல்**

**தெரிகிறது ”[7]**

உண்மையும், அகிம்சையும் காந்தியத்தின் அடிப்படைத் தத்துவமாகும். நம்முடைய இலட்சியங்களும் நாம் அடையும் வழிமுறை களும் தூயதாகவே இருக்க வேண்டும். பிறரைத் துன்புறுத்துவதாக இருக்கக் கூடாது என்ற நெறியைக் கடைப்பிடித்தவர் காந்தியடி கள். ஆனால் இந்த உலகத்தில் காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றவர்கள் அனைவராலும் பின்னுக்குத் தள்ளப் படுகின்றனர் என்பதை ‘மரங்கள்’ என்ற தலைப்பின் கீழ் உள்ள வரிகளில் விளக்குகிறார்.

**“சட்டையை மாற்றும்**

**சாரைப் பாம்புகளுடன்**

**சண்டையிட்டுக் கொண்டோம்**

**ஆதலால்**

**காலந்தோறும்**

**ஒரே உடையை**

**உடுத்தியிருக்கிறோம் ”[8]**

என்று கவிஞர் குறிப்பிடுகின்றார்.

‘மாம்பழ ஊரில் மனக்குயில்கள் அழுகின்றன’ என்ற தலைப்பில் காந்தி சிலைக்குச் செருப்பு மாலை போடப்பட்டதற்காக வருந்திக் கவிதை வடிக்கிறார்.

**“பிட்டுக்கு மண் சுமந்தவன்பட்ட**

**பிரம்படி போல்**

**உன்மீது பட்ட அசிங்கம்**

**உண்மையான இந்தியன்**

**ஒவ்வொருவன் மீதும்பட்டது ”[9]**

என்ற திருவிளையாடற் புராணத்தை நினைவுப் படுத்துகிறார். காந்தியடிகளைச் சிவபெருமா னோடு ஒப்பிடுகின்றார். சிவபெருமானுக்கு விழுந்த அடி அனைவரின் மீதும் பட்டதைப் போல காந்தியின் மீது விழுந்த செருப்பு மாலை ‘இந்தியர்’ ஒவ்வொருவரின் மீதும் விழுந்ததாகும் என்கிறார்.

**“காந்தியை மறந்தாலும்**

**காந்தியின்**

**கைத்தடியையாவது**

**ஞாபகப்படுத்தும்**

**காலம் வந்துவிட்டது ”[10]**

என அன்புமயமான அகிம்சாபூர்வமான காந்தியக் கொள்கைகள் மறந்து இன்றைக்குப் புரட்சியில் நுழையக் கூடிய காலக் கட்டத்திற்குத் தள்ளப்பட்ட நிலையைக் காட்டுகிறார்.

**“உண்மையோடு**

**சாந்தநெறி அந்தநெறி அன்பால் ஈர்க்கும்**

**காந்திநெறி, வறுமையைப் போர் வெறியை ஒட்டும்**

**காந்திநெறி, சாந்திநெறி ஆய்ந்து கொள்வீர் ”[11]**

என்று இக்கவிதையில் வறுமையையும், போர் வெறியையும் நீக்குவதற்குரிய உயரிய நெறி ‘காந்தி நெறி’ ஒன்றே என்று கூறுகின்றார்.

**முடிவுரை**

காந்தியத்தைப் பாடுகின்ற பொழுது மு. மேத்தாவிடத்தில் இரண்டு விதமான போக்குகள் காணப்படுவதை அறிய முடிகின்றது. காந்தியம், சீர்திருத்தம் போன்ற எண்ணங்களின் பலன்களை இவர் தம் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

**சான்றெண் விளக்கம்**

1. கலைக்களஞ்சியம், தொகுதி-1, ப. 155
2. சிவகாமி பரமசிவம், மனித உரிமைகள், ப.63
3. இராமச்சந்தின்,க., மேத்தாவின் கவிதைகளில் சமுதாயப்பார்வை, ப. 79
4. பாரதியார், பாரதியார் கவிதைகள், பா. 126
5. இராமச்சந்திரன்,க., மேத்தாவின் கவிதைகள் சமுதாயப் பார்வை,ப. 80
6. மு.மேத்தா, கண்ணீர்ப் பூக்கள்,ப. 34
7. மேலது, ப. 34
8. மேலது, ப. 39
9. மேலது, ப. 84
10. மேலது, ப. 84
11. மேலது, ப. 84